


# என் தமிழ்த் தாய்க்கு முதல் முத்தம்....

கவிஞர் தேன் மொழியான்
(சு. சுரேஸ்குமார் Bsc(Hon) (Jaf))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தமிழ் தாய்க்கு
# முதல் முத்தம்

கவிஞர் தேன்மொழியான்

அருவி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தமிழ் தாய்க்கு முதல் முத்தம் + கவிஞர் தேன்மொழியான் + முதல் பதிப்பு : மார்ச் 2009 + அருவி வெளியீடு. 5டி, பொன்னம்மாள் சாலை, கே.கே. நகர், சென்னை - 78. போன்: 094443 02967 / 099401 65767.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் வெளுக்கும் - நம்
# ஈழமும் பிறக்கும்

**- கவிபாஸ்கர்**

மனிதர்கள் பலர் வாழும் - பரந்த இவ்வுலகில் தமிழீழ தேசமட்டும் இன்னும் வாழ்வதற்காக மட்டுமே பல ஆண்டுகளாய் தவிக்கிறது. உலகமே! தமிழீழ மண் மண்ணில்லையா? அங்கு வாழ்பவர்கள் மனிதரில்லையா? என்ற கேள்வியை தமிழர் இனம் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது. என்ன செய்வது மரணத்திற்கு காது கேட்காது... எதிரொலிக்கு அறம் தெரியாது என்பதை வரலாறுகள் பாடம் கற்பிக்கிறது. ஆனால் ஒன்றுமட்டும் நிதர்சனமான உண்மை. ஒடுக்கப்படும் இனம் ஒருநாள் உயிர் பெறும் நீண்ட தொடர்கதையில் முடிவு ஒருநாள் விடிவு பெறும்.

இந்நூலில் உலவும் தம்பியின் கவிதைகள் ஒவ்வொன்றும் தாய்நாட்டின் ஏக்க பெருமூச்சாய் சுடுகிறது. உள்மனதில் வடியும் இரத்தமும் எதிர்கால தேசத்தின் கனவும் காணக்கிடக்கின்றது கவிதையில்,

"தறிக்கத் தறிக்கத்
துளிர்த்தெழுவோம் நாங்கள்
எரிக்க எரிக்க
உயிர் பெறுவோம் நாங்கள்
அழுத்த அழுத்த அகன்றொழுவோம்
மறுக்க மறுக்க
மடையுடைக்கும் ஆறாவோம்"

நம்பிக்கைத் துவக்குகளால் எச்சரிக்கை விடுகிறான் எதிரிக்கு. இவனின் கவிதை தேசத்தின் படைக்கருவியாய் வளர்ந்து நிற்கிறது. தேசத்தைவிட்டு ஏதிலியாய் வாழும் மனக்குமுறல் எழுத்தில் எத்தணிக்கிறது. தன் தாய்நாட்டு விடுதலையை நோக்கி ஏங்கி தவிக்கிற தவிப்பாகவே இந்நூல் பிரசவமடைந்திருக்கிறது இவருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வன்னி மண்
சுனைகள் அற்ற சுடுமணலும் அல்ல
மரங்கள் அற்ற பாலைவனமும் அல்ல
– என்று

தமிழீழம் உயிர்ப்பதை உணர்வோடு சுட்டிக்காட்டுகிறார் தம்பி.

"வளரும் மரங்களை
வெட்டிப்பார் – அங்கு வடிவது
பால் அல்ல!
பத்து தலைமுறைக்கு முந்திய
உன் பாட்டியின் இரத்தம்"
– என

பீறிட்டு எழும்போது நமக்கு இதயம் விம்மி எழும். வாழ்வதற்கு தேடும் தேடல் ஒவ்வொரு கவிதைகளிலும் கூடு கட்டியிருக்கிறது. பிறக்கப்போகும் தமிழீழத்தில் தம்பி சுதந்திரமாய் பழைய நினைவுகால கனவில் வாழும்படியும் நம் தேசத்தின் இலக்கு வெற்றி பெறும் என்பதையும் தாய் தமிழ்நாட்டிலிருந்து, நான் ஆறுதல் தருகிறேன்... சிங்களம் விரைவில் அழியும் தமிழீழம் விரைவில் விடியும் வாழ்த்துகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞனின் இதயம் பேசுகிறது

ஒரு கவிஞனும், அவனுடைய கவிதைகளும் அவன் வாழும் சமூகத்தினதும் அவனைச் சூழ உள்ள சமூகத்தினத்துக்கும் நுணுக்காட்டி மாத்திரமல்ல தொலைக்காட்டியும் கூட.

ஒரு சமூகத்தினது நுணுக்கமான பிரச்சினைகளில் இருந்து தொலைதூரப்பயணம் வரையான நிகழ்வுகளை, சீர் திருத்தங்களை பலகோடி வார்த்தைகள் கொண்டு வளர்க்க வேண்டிய விடயங்களைக் கூட ஒரு பக்கத்தில் கொண்டு வருபவன்தான் கவிஞன்.

இயற்கையாக நிலத்தில் விழுந்து முளைக்கும் விதைகள் போலவே ஒரு சமூகத்தின் கவிஞன் இருக்க வேண்டும். அவனுக்கு யாரும் அடி எடுத்துக் கொடுக்கக்கூடாது. கொடுக்கவும் முடியாது. அதுதான் உண்மையும் யதார்த்தமும் கூட.

எங்கள் ஈழத்துக் கவிஞன் "புதுவை" அண்ணா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கும் எங்கள் அன்புக்கும், பாசத்திற்கும் நிறைந்த ஈழத்து விடுதலைப் போராட்டத்தின் இதயத் துடிப்பு அவனேதான். அவன் என்று சொல்வது ஒன்றும் அவமதிப்பில்லை. அவர் மீது இருக்கும் அளவு கடந்த காதல்தான் காரணம். அவர் பெயரை ஈழத்து புல் முதல் லுனிக் குஞ்சு வரை பாடி மகிழும். அவருக்கு வாழ்த்துச் சொல்லி கவிதை எழுத பலமுறை முயன்று தோற்றுவிட்டேன். அவருக்கு எழுத ஆரம்பித்ததும் கை நடுங்க ஆரம்பித்து விடும் ஏனென்றால்,

எரிமலைக்கு தீக்குச்சிகள் வாழ்த்துப்பா பாடுவதா? அவர் ஒரு மூடி வைத்த எரிமலை. எப்பொழுதெல்லாம் மூடி திறக்கிறதோ அப்போதெல்லாம் அக்கினிக் குழம்புகள் மட்டுமே கக்குகின்றன.

அவருடைய கவிதைகள் உண்மையை மட்டுமே சொல்லி நிற்பன என்பதை காலம்தான் உணர்த்தும்.

இங்ஙனம்

சி. சுரேஸ்குமார்

கவிஞர் தேன்மொழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான சுரேஸ் மாஸ்டர்
என் அன்பான வணக்கம்

தங்களுடைய முயற்சி
திருவினையாக்கும்
எண்ணித்துணிக துணிந்தபின்
எல்லாமே வெற்றிபெறும்
எது நடக்க இருக்கின்றதோ அது
நன்றாகவே நடக்கும்
அதனால்
தடைகளைக் கடக்கும்
மனத்துணிவோடு
வருவதை எதிர்கொள்ளும்
புதிய உலகம் நிச்சயம்
வெற்றிகளைக் குவிக்கும்

எனது தாமதத்திற்கு
மன்னிக்கவும்
வேறு கவிதைகளிலும்
சேர்த்து ஒரு சிறு
கவிதைப்புத்தகமாக வெளிவர என்
ஆதரவு என்றுமே இருக்கும்
நெல்சன் மண்டேலா எனும்
தலைப்பில் வரும்
தொடர்ச்சியை என்னாலும் தான்
எழுதமுடியாத
பரணியாகி நிற்கிறது
எங்கள் உறுதிக்குள்
உயிராகி நிற்கும்
ஆணிவேரையல்ல பக்கவேரைக்கூடத்
தொட்டுப்பார்க்கக் கூட
நாம் அருகதையற்றவர்கள் அதனை
எழுத்தில் வடிப்பது தவறாகப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய நீண்ட ஆயுள் தமிழினத்தின்
வரலாறாக மாறவேண்டும்
முயற்சிகள் தொடரட்டும்
உங்களுடைய எண்ணக்கருவை
குலைக்காதபடி
சிறு சிறு திருத்தங்கள்
மேற்கொள்ளப்பட்டுள்ளது

தேவையில்லை எனக் கருதும் பட்சத்தில்
அவற்றை தவிர்க்க தங்களுக்கு உரிமை உண்டு
நன்றி போன் பண்ணுங்கள்
நன்றி வணக்கம்

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே

*என்தாய் என்னைப்பிரிந்தபோது (21.10.2000 ஆண்டு ஏவப்பட்ட எறிகணை வீச்சில் மாரடைப்பால் உயிர்நீத்தபோது)*

*யேசு சுமந்த சிலுவைகள்*
*உன்னைப் பொறுத்தவரை சிறியவைகள்*
*உலகம் உறங்கட்டும் - என்று*
*சூரியன் மறைந்தாலும்*
*நீ உறங்குவதில்லை*

*நீ இறுதி மூச்சுவரை ஓயாது உழைத்தாய்*
*உன் உழைப்பின் கடுமையை*
*நீ வளர்த்த பசுக்கன்றுகளும்*
*நீ பாவித்த புல்லறுக்கும் உளவாரமும்*
*நன்கு அறியும்*

*நீ கடைசி நாள்வரை அணிந்த - அந்த*
*அறுந்த செருப்பு இன்னும் - என்*
*பெட்டகத்தில் பூட்டிவைத்திருக்கின்றேன்*
*வீட்டில் இறுதியாக உணவருந்துவது*
*நீதான் அம்மா - ஆனால்*
*அருந்துவதில்லைக் குடித்துக்கொள்வாய்*
*பானைகழுவும் நீர்தான் உனது*
*இராப்போசனமும் கூட*

*கல்வியப் பதிவாழ்*
*வீரபத்திரர் ஆலயத்திற்கு*
*நீ அதிகம் செல்வதில்லை - ஏனென்று*
*எனக்குத்தெரியும் அங்கே*
*மனிதநேயம் இல்லை*
*வறுமைப்பட்டவர்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கவிடாது
பணம்படைத்தவர்களின் முதுகு
நந்திபோல் மறைத்துக்கொள்ளும்
இதை நீ நன்கு அறிவாய்

நீ நடந்த வீதிகளிலெல்லாம்
இன்று நான் நடக்கும் போது
குறுணிகளும் சிறு மண்கற்களும்
உன்னை என்னிடம்
நலம் விசாரித்துக் கொள்கின்றன

மழையில்லாக் காலங்களில்
உன் வியர்வை பட்டு தாம்
குளித்துக்கொண்டதாக அவை கூறுகின்றன

உன் பாரங்களைத் தாமும் சேர்ந்து
சுமந்துகொண்டதாக பெருமைப்
பட்டுக்கொள்கின்றன

அழகிய அந்த கல்வியங்காடு எனும்
விவசாயக் கிராமத்தில்
பொழுதுசாயும் போது
உன் சொற்கேளாது துள்ளிக் குதித்து
தூரவிலகும் கன்றுக்குட்டிகளை – நீ
அன்பாய் அழைப்பது இன்னும் என்
காதில் ஒலிக்கிறது

யுத்தமெனும் இருட்டறை சூழ்ந்த
அந்தக்கிராமத்தில்
வறுமை உன்னை வாட்டியது
ஊரே உன்னைத் திரும்பிப் பார்க்க மறுத்தது
ஆனால் நீ தளரவில்லை
கடினமாய் உழைத்தாய் அதுவும் கடைசி
வரை உழைத்தாய்
பிள்ளைகளிருவரை ஐரோப்பாவிற்கு
அனுப்பி வைத்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி மகனைப் பல்கலைக்கழகம் வரை
கற்பித்தாய் – ஆனால்
பட்டமளிப்பு விழாக் காணாமல்
போய்ச்சேர்ந்தாய்

பிள்ளைகள் வாழ இரு
அரண்மனைகளைக் கட்டித்தந்தாய்
உன் தளராத மனவுறுதி இறுதிவரை
உலகை இயக்கும் அச்சாணி

உன் மனவுறுதி
ஆயிரம் பிடல்கஸ்ரோக்களுக்குச் சமம்

உன் உழைப்பு ஆயிரம்
பெஞ்சமின்பிராங்கிளினுக்குச் சமம்
வானத்தில் இருள் சூழும்போது
நட்சத்திரங்கள் வெளித்தெரிவதுபோல்
வீட்டைத் துன்பம் சூழும்போது
குலவிளக்காய் ஒளிர்ந்து விளக்கேற்றினாய்

உன் வயிற்றில்
பிறக்க மீண்டும் ஆசைப்படுகின்றேன்
நீ ஊட்டிய பாற்சோறு
நீ தாலாட்டிய தாலாட்டு ராகம்
நீ ஊட்டிய பால் மீண்டும்
காணஆசைப்படுகின்றேன் – முடிந்தால்
மீண்டும் சுமந்துகொள் – என்னை
மீண்டும் சுமந்து கொள் – உன்னை
மீண்டும் வயிற்றறையில் சந்திக்கும்வரை
காத்திருப்பேன்... தொடரும் உறவுகள்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமதர்மம்

எங்கள் வியர்வை நிலத்தில்
விழவில்லை என்றால்
உங்கள் மாடியில்
விளக்கெரியாது
நாங்கள் தொழிலாளர்கள்....
கடின உழைப்பே பலன் தரும் என்று
இன்று நேற்றல்ல
பல நூற்றாண்டுகளாகவே நம்பிவருகிறோம்

தொழிலாளி
இல்லையென்றால் தொழிற்சாலை
இயந்திரங்களெல்லாம்
துருப்பிடித்துவிடும்
தொழிலாளியின் இரத்தம்
அசுத்தமாகுமானால்–நாளை
அவன் உனக்கு இரத்ததானம் செய்ய முடியாது
தொழிலாளி உனது வாடிக்கையாளனும் கூட
அவன்வாழ்வு உயரவில்லையென்றால்
உன் மாடியைத்தாங்கும் தூண்களெல்லாம்
நலிவடைந்து வருவதாக எண்ணிக்கொள்.

முதலாளித்துவம் தொழிலாளியின்
இரத்தமுறுஞ்சும் பாம்புகளாக இருக்குமானால்
முதலாளித்துவத்திற்கான
சாவுமணி அடித்துவிட்டதாக் நினைத்துக்கொள்.

தொழிலாளியின் வயிறு பசியோடு என்றொருநாள்
படுக்கைக்குச் செல்கிறதோ!
அன்றே முதலாளித்துவத்தின் சவப்பெட்டிக்கான
முதலாவது ஆணி அடிக்கப்பட்டாயிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரல்மார்க்ஸ் கூறிய சமதர்மம் தான்
இன்று உலகத்தை வழிநடத்திச் செல்கிறது
முதலாளித்துவ நாடுகள் திணறுகின்றபோதும்
சீனதேசம் நிமிர்ந்து நிற்கும் அழகைப்பார்!
சீனதேசக்கொடியில் ஒளிரும் நட்சத்திரத்தை
மீண்டும் மீண்டும் உற்று நோக்கு உனக்கு
அங்கே தெரிவது ஒன்றுமட்டும்தான்

"கடின உழைப்புக்கு நிகர் கடின உழைப்புத்தான்"
காண்கின்ற திசையெங்கும் சமதர்மம்
மலருகின்ற நாள் நெருங்கி விட்டது

முதலாளித்துவம் முனகத்தொடங்கி விட்டது
சமதர்மம் சிரிக்கத் தொடங்கி விட்டது
முதலாளித்துவம் சிந்திக்கத்தொடங்கி விட்டது
முதலாளித்துவம் தன்னை
பெயர்மாற்றம் செய்ய முனைகிறது
அதைக் கைதட்டி வரவேற்க
பலகோடி கரங்கள் தயாராகுகின்றன... ஆனால்

நடிகர்களால் நடிக்க முடியும் –
அது ஒருபோதும் நிஜமாவதில்லை – இருப்பினும்
நிஜத்தால் என்றுமே நடிக்கமுடியாது
அதுவும் நடிக்குமானால்
அதுவும் மழையில் நனைந்த திருநீற்றுப் பூச்சாகிவிடும்
மலர்ச்சி என்பது எல்லோராலும் விரும்பத்தக்கது
சமதர்மத்தின் மலர்ச்சியானது
நீதி தேவதை நித்திரை விட்டெழும் நேரமாகும்
ஒட்டுமொத்தத்தில் உழைக்கும் வர்க்கம்
ஒடுக்குமுறையில் இருந்து விடுபடும்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தாய்

என் தாயின் வயதை முடிந்தால்
எவனாவது சொல்லட்டும் - அவனை
இந்த உலகத்தின் அரசனாக்குவேன்
என் தாய் பெற்ற பிள்ளைகள் போன்று
எவராவது பெற்றிருந்தால் காட்டுங்கள் பார்ப்போம்
என் தாய்பெற்ற பிள்ளைகள்
முழுமையானவர்கள்
முதல் நிலையானவர்கள்

ஔவை வள்ளுவன் கம்பன் இளங்கோ... என
இவர்களைப்போல் ஆயிரம் ஆயிரம்
குழந்தைகளைப் பெற்றும் - அவளை
பிரசவ வலி தாக்கியதில்லை
பெறுவது என்பது அவளிற்கு
பெருமை சேர்க்கும் விடையம்

என் தாய்க்கு நேற்று இன்று நாளை
என்றும் மாதவிடாய்ச்சக்கரம் இயங்கிக்கொண்டே இருக்கும்
சைவசமயம் அவளின் கணவன்
இருவரும் பல ஆயிரம் இரவுகள்
இணைந்து பிணைந்து பெற்ற இணையில்லாப்
புகழ்பெற்ற புதல்வர்கள் கோடி கோடி

கண்ணதாசன், கருணாநிதி, வைரமுத்து, பாலசுப்பிரமணியம்
ஜானகி, சித்திரா எனச் சொல்லிக்கொண்டே போகலாம்
ஆனால் அவளின் வரலாறு
தேட என் ஆயுள் போதாது
நானும் அவளின் கடைக்குட்டி என்பதில்
குதுகலிக்கின்றேன் கும்மியடிக்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இறந்தாலும் மீண்டும் – உன்
வயிற்றில் மட்டும் தான் பிறக்க வேண்டும்

நீ இட்ட கல்வி
நீ ஊட்டிய உணவு
நீ வழங்கிய சங்கீதம்
நீ வழங்கிய கலைகள்
நீ தந்த காதலி இவைகள் அத்தனையும்
எத்தனை பிறப்புப் பிறந்தாலும்
அனுபவித்து முடியாது

உன்னை நான் ஆழமாக அனுபவிப்போமானால்
நான் சிவலோகம் செல்ல முடியாது
மீண்டும் மீண்டும் பூமியிலேயே
பிறந்து கொள்வேன் – ஆனாலும்
ஆயிரம் சிவலோகங்கள் சேர்ந்தாலும்
உன் அன்பான அரவணைப்புமிக்க
மடியில் தவழ்வதுபோல் இன்பம்
வேறெங்கு உண்டு

நானும் நீயும் ஆரத்தழுவி இடும் முத்தங்கள்
இன்னும் ஆயிரம் ஆண்டுகள்
ஈரேழுலகம் உணரும்படி ஒலிக்கவேண்டும்
வானமளந்து அனைத்துமளந்த
என் தாய் வாழிய வாழியவே!
உன் வாழ்வை யாராலும் தடுக்க முடியாது
உன் சாவையாராலும் தீர்மானிக்கமுடியாது
நீ ஒரு பீனிக்ஸ் பறவையம்மா
உனக்கு எழுதும் கவிதையை
என்னால் நிறுத்தவே முடியவில்லை........

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிமலை

மலைகள் இல்லாத தேசமொன்றில்
எரிமை தோன்றிய அதிசயம்
அதுதான் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட நாள்

ஆசியாவின் முதல் நிலை நூல்நிலையத்தை
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்
சேர்த்துவைத்தப் பெட்டகத்தை
அறிஞர்கள் பலரைப் பிரசவித்த அந்த
தாயைத்துகிலுரிந்தார்கள் – அந்த
துச்சாதனர்கள்
நெருப்பே உன்னை நாம் சபிக்கின்றோம்
எமது திருமண நாளில் உன்னைப்
புனிதப்பொருளாய்க் கருதி
உன்னையே சாட்சிக்கையெழுத்திற்கு
பல்லாயிரமாண்டுகளாய் அழைத்திருக்கின்றோம்
ஆனால் நீயோ எமது நீதிமன்றத்தில்
சாட்சிசொல்ல வரவில்லை
உனக்குப் பாவமன்னிப்புக் கிடையாது
தீயின் நாக்குகள் தீண்டிய காட்சிகண்டு
நெஞ்சு பொறுக்காது துடிதுடித்த துறவி
தாவீது அடிகள் தன்னுயிர் இழந்துபோனார்

கொன்றவரிலும் தின்றவருக்குத்தான் இருமடங்கு பாவம்
நீ பாவி மாத்திரமல்ல பாவிகளின்
தந்தையும் கூட
தமிழீழம் மலரும் போது – முதல்
பிடிவிராரண்டு உனக்குத்தான் வரும்

எமது நாட்டில் மரணதண்டனை இருக்கிறது ஏனென்றால்
உயிர்களின் பெறுமதி எமக்கு நன்கு தெரியும்
ஆனால் உனக்கு ஆயுள் தண்டனை வழங்குகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று உனக்கு உதவி செய்ததாக அறிகின்றோம்
விசாரணை முடிவில்
தமிழீழக் காவல்துறை மூலம்
கடிதம் அனுப்பப்படும்
காலத்தால் நீ செய்த பிழையால்
எம் பிள்ளைகள் கல்வியறிவின்றி
வாழ்ந்து முடிக்க மீண்டும் அனுமதியோம் – அதனால்
உன்னை ஆயுள் முழுக்க அடைத்து வைப்போம்

ஆனால் உனக்கொன்று சொல்வேன்
உன் பிள்ளைகளை
எங்கள் வீடுகளிற்கு அனுப்பி வை
பத்திரமாய் உணவளித்து உபசரிப்போம்.
ஏனென்றால் நாங்கள் தமிழர்கள்............

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமி

*கரையில் நின்றபோது*
*கடல் வானத்தைத் தொடுவது தெரிந்தது*
*பாவிகளை மீட்க யேசுவந்துவிட்டார்*
*என்றல்லவா நினைத்தோம் – ஏனென்றால்*
*நேற்றுத்தானே யேசுவினுடைய*
*பிறந்த தின விழாவைக் கொண்டாடினோம்*
*நினைத்து முடிப்பதற்குள் நீண்ட காலக் கனவுகளோடு*
*வாழ்ந்த எமது மீனவச் சமுதாயத்தை*
*ஆழிப்பேரலையோ அள்ளிச்சென்றதே!*

*அள்ளிச் செல்லப்பட்டவர்கள் கரையொதுங்கிய போது*
*கொள்ளிவைக்கக்கூட ஆளில்லையே!*
*பள்ளிமாணவர்கள் வெள்ளைச்சீருடையோடு*
*கரையொதுங்கிய அந்தக் காட்சி*
*கடல் அன்னையே! எம் குழந்தைகள்*
*உனக்கு என்னதான் செய்தார்கள்?*
*ஏன் இந்தத் தண்டனை?*
*நாளும் உனை நம்பியல்லவா*
*எம் வயிறுகள் காத்துக்கிடக்கும்*

*பெற்ற தாயவளே பிள்ளையைக்*
*கொன்றதுபோல் அந்த*
*வஞ்சமில்லாப் பிஞ்சுப்*
*பாலகரை ஏன் கொன்று குவித்தாய்*

*அரசியல் ஒடுக்கு முறைக்கும்*
*சாதிக்கோட்பாட்டாளர்களுக்கும் – நாம்*
*சிறைப்பட்டிருப்பதை – உன்னால்*
*தாங்கமுடியவில்லையா? – அதனால்தான்*
*சீற்றம்கொண்டு சீறியெழுந்தாயோ!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை விடுதலை செய்யத்தான் நீ
பொங்கியெழுந்தாயோ?

புனிதம் பேசும் பல மதங்கள் இருந்தும்
பஞ்சசீலக்கொள்கை கொண்ட புத்தன் இருந்தும்
பனி வெயில் புயல் எனப்பாரா உழைக்கும்
எம்வர்க்கத்தை பூமியில் ஒடுக்குவார்களானால்
எம்மை விடுதலை செய்ய – நீ
மீண்டும் பல்லாயிரம் தடவைகள்
பொங்கவேண்டும்

நாங்கள் உன்னோடு கலக்கவேண்டும்
இதை நாம் அன்போடு வேண்டுகின்றோம்
ஏனென்றால்
அடிமையாய் வாழ்வது – அந்த
ஐந்தறிவு நாய்கூட விரும்பாது..........

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனாதைச் சிறுவன்

யார் அவன்?
ஓட்டை விழுந்த காற்சட்டை
பரட்டைத் தலைமுடி
மூக்குநீர் வாயில்பட
முப்பது நாட்கள் குளிக்காததுபோல்
ஒரு தோற்றம்...

தலையிலே விறகுக்கட்டு
கையில் கத்தி
பாதணி அற்றபாதம்
முட்கள் முத்தமிட்டு
மரத்துப்போன பிஞ்சுக்கால்கள்

வயது பன்னிரண்டு
வழிப்போக்கனாய் சந்தித்தபோது
உன் பெயர் என்ன தம்பி என்றேன்?
என்பெயர் வேலைக்காரன் என்றான்
உன் முகவரிதான் என்ன என்றேன்?
நான் அனாதை என்றான்

யேசுவிற்கு அறைந்த அத்தனை ஆணிகளும்
என் இதயத்தில் ஒன்றாய் இறங்கியது

என் விழிகள் இருந்தும்
ஒன்றுக்குத் தெரியாமல் மற்றொன்று நீர் சொரிந்தது
நான் உன் அண்ணன்
நீ என் தம்பி
காலம் உன்னைக் கட்டிப்போட்டிருக்கிறது
நீ தான் நாளைய தலைவன்
ஆயிரம் ஆயிரம் ஓடங்களிற்கு நீதான்
கலங்கரை விளக்கம்!
உனக்குள் மாபெரும்
எரிமலை இருக்கிறது
உனக்குள் ஓயாது அடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி அலைகள் கோடி கோடி
நீ சக்திமிக்கவன் - ஏனென்றால்
உன் அளவுக்கு மீறிய சுமைகளை
இப்பொழுதே சுமக்க கற்றுக்கொள்கிறாய்

உலகம் உன்பெயரை எப்படி அழைத்தாலும் - அதை
தாங்கிக்கொள்கிறாய்
வறியவர்களின் வாழ்வியல் போராட்டம்
உனக்குத்தான் நன்கு விளங்கும்
வயிற்றுப் பசி என்பதற்கு நீதான்
வரைவிலக்கணம் கொடுக்கமுடியும்

வானத்து நட்சத்திரங்கள் அனைத்திற்கும்
நீதான் தலைவன்
நாளைய சந்ததிக்கு
கல்வி செல்வம்
வீரம் அனைத்தும் வழங்கும்
வீரத்தளபதி நீதான்

உன்னைப்போன்றவர்கள் தான்
உலகசரித்திரத்தையே மாற்றினார்கள்
உனக்கு உதாரணம் சொல்வதென்றால்
முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி
ஆபிரகாம் இலிங்கன் ஒருவனே போதும்

ஆயிரம் தடைகள் உன் வழியில் வந்தாலும்
உன் நடைகள் அவற்றை உடைத்தெறியும்
உலகம் அழியும் வரை
உன் பெயர் எட்டுத்திசையும் ஒலிக்கும்
உன் சிலைகள் உலகம் முழுவதும்
நிறுத்தப்படும்

உன்னைப் பின்பற்ற
ஆயிரம் ஆயிரம் சிறுவர்கள்
அணிவகுத்து நிற்பார்கள் - ஆகவே
நீதான் வரலாற்றின் சிற்பி...

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூச்சியம்

புனிதமான பொருட்களில் பூச்சியமும் ஒன்று
முகத்தில் புன்னகை இருந்தால்
கவலைகள் பூச்சியம்
ஒன்றுக்குப் பின் பூச்சியங்கள் அதிகரித்துவிட்டால் – நீ
பெறுமதி மிக்கவன்
மாங்கல்யத்தின் குங்குமம்
ஒரு பூச்சியம் எதுவுமே இல்லாதவனிடம்
இருப்பதும் பூச்சியம்

பூச்சியம் உன்
முன்னேற்றப் பாதைகளிற்கான முதலீடு
பூச்சியங்களை ஒருமுறை முத்தமிடு
முத்தங்கள் காட்சியளிப்பது பூச்சியம்
உலகைக் காணும் கண்களும்
இரு பூச்சியங்கள்
ஏன் நீ வாழும் பூவுலகும்
ஒரு பூச்சிய வடிவம்

ஒட்டுமொத்தத்தில் பூச்சியமே
மிகவும் பெறுமதி மிக்கது
உலக இயக்கத்தின் அச்சாணி
சூரியன் சுட்டுவது பூச்சியம்
எதுவும் இல்லையென்று
கவலைப்படாதே நண்பனே!
உன்னிடம் நிறையப் பூச்சியங்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி செய்து இடப்பக்கத்தில் ஒன்று இடு
பூச்சியம் வலிமை மிக்கது
உலகை ஆட்சி செய்வதும் பூச்சியம் தான்
மன்னிக்கக் கற்றுக்கொள்
பகைமை பூச்சியமாகும்
தீயவற்றை நாளை செய்வதற்கு
ஒவ்வொரு நாளும் ஏற்பாடு செய்
பாவங்கள் பூச்சியமாகும்
அழகுமிக்கதும் பூச்சியம் தானே

நீ பூக்களைத் தொடுத்து மாலை செய்
அதன் வடிவமும் பூச்சியமாகும்
புனிதமான வாழ்வுக்கு
மிகவும் அவசியம் பூச்சியம்
மீண்டும் சொல்கிறேன் – என்னிடம்
எதுவும் இல்லையென்று கலங்காதே
உன்னிடம் நிறையப் பூச்சியங்கள் உண்டு

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை

உலகின் மிகச் சிறந்த
ஆசிரியன்
நேர்மையாளர்களின்
நண்பன்
வாழ்ந்து காட்டியவர்களின்
கைத்தடி
வீரமிக்கவர்களின்
விளை நிலம்
சோம்பேறிகளின்
ஊக்கமாத்திரை

★★★

## பெண்ணினமே

வண்ண மயிலென்றும்
புள்ளிமானென்றும்
புன்னகை அரசியென்றும் - ஏன்
போகப்பொருள் என்றும்
உன்னைப் புகழ்வார்கள்

கீதையில் கண்ணன் சொல்வதுபோல்
புகழுக்கு நீ அடிமையாகி விட்டால்
நீ என்றுமே மீளமுடியாத அடிமைதான்
படுக்கையறையும் சமையலறையும்தான்
உனக்குச் சொந்தமென்றெண்ணி விடாதே

அந்தக்காலத்திலே ஏவாள்தான்
ஆப்பிளைச் சாப்பிட்டுப்
பாவம் செய்தாள் என்றார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாண்டு காலமாய் நீ அடிமைப்பட்டது போது
பூமியைப் பிரசவித்த நீயே
அடிமையாய் இருப்பதை
மனுநீதி கண்ட சோழப்பரம்பரையில்
வந்த எங்களால்
பொறுத்துக்கொள்ள முடியவில்லை

உலகம் முழுக்க முழங்கும்
பொங்கு தமிழ் போல் பொங்கு
புயலென எட்டுத்திசையும் வீசு

வீறு நடைபோட்டு வெற்றிகளைக் குவித்துக்கொள்
வானுலகில் வாழும் பாரதி
உன்னைக்குறித்துக் கவியெழுதுவான்
அவன் கண்ட கனவுகள்
நனவாகியதால் அவன் மகிழ்ச்சிப்
பெருவெள்ளத்தில் மூச்சுத்திணறுவான்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனிமொழிக்கு

நீ பொங்கியதால் நாளை
தலைவன் உடைப்பான் தடைகள்
அன்பின் எம் இனிய கனிமொழியே!
நீதான் இந்த நூற்றாண்டின் தமிழ்த் தாய்

உன்னைக்குறித்து என்னால்
எழுதாமல் இருக்க முடியவில்லை
ஈழத்தமிழன் வனவாசத்திலிருக்கிறான்
விமானங்கள் வல்லூறுகள் போல் எங்கள்
குஞ்சுகளைக் கொல்லுகின்றன
கானகத்துப் பட்சிகள் எம்குழந்தைகளை
தின்று மகிழ்கின்றன
விம்மியழுகிறாள் எம்மைச் சுமந்த தாய்

அர்ச்சுனனுக்கு அன்று
தேரோட்டிய கண்ணன்
இன்று ஈழத்தமிழனுக்கு வரமாட்டானா?
என்று நாம் விழிபிதுங்கி இருக்க
வாழ்வின் ரம்மியமான உணர்வுகளை
உணராமலே உணர்வற்று இருந்த எம்
சகோதரிகள் எத்தனை எத்தனை!

எனக்குத் தெரியும்
கடல் எம்மைப் பிரிக்கவில்லையென்றால்
நீயும் புயலென வீசும் ஓர் போர்ராளி
புதுமைப் பெண்ணினத்தின் முன்னோடி
தமிழீழ உறவுகளின்
உதிரத்தின் பிணைப்பிலே
தாய்வழி உறவுக்கோர் வழிகாட்டி
தூக்கியெறிந்தாய் நேற்று உன் பதவியை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழனுக்கு இன்று நேற்றல்ல
என்றென்றும் நீ குரல்கொடுப்பது
எமக்குத்தெரியும்

எம் இனிய கனிமொழியே!
உன் தனிவழியே
எம்மைத் தனிவழியில் நடத்தும்
உன் நல்லாரோக்கியத்திற்கு
எம் இதய பூர்வமான நல்லாசிகள்
தொடரட்டும் உன் தொலைதூரபாசம்
தொட்டுக்கொள்ளட்டும் எங்கள்
இதயங்களின் நேசம்....

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரமுத்துவே....

முத்துக்கள் பலவகை – அதில்
வைரமுத்துவும் ஒரு வகை
இந்த நூற்றாண்டின் தமிழ்த்தாயின்
தாலியின் பெயர் வைரமுத்து

பல கன்னியர்கள்
தாயாக மாறுவதற்கு
காரணமானவன் வைரமுத்து – ஏனென்றால்
அவன் கவிதைகள்
கலைரசனையுடன்
காதல் நயமும்
கொண்டவைமட்டுமல்ல அவை
சில வேலைகளில் வயக்கரா
மாத்திரையையும் மீறிவிடுகின்றன

நீ வீரமிகு தளபதி மட்டுமல்ல
ஒரு வரலாலாற்று
ஆசிரியனும் கூட
இராமேஸ்வரத்தில் நீ கொட்டிய முழக்கத்தில்
வரிக்கு வரியாய்
தமிழர் வரலாற்றுப் பின்னணியை
உருக்கி வார்த்த நின் உவப்பான குரலொலியை
பிரித்தானியாவிலிருந்து
பேரதிர்ச்சியுடன் கண்ணுற்றேன்

நீதியை தராசுத்தட்டில் நிமிர்த்துகின்ற
புலமை நீதிகேட்டு தமிழனுக்காய்
நெஞ்சுமுட்டிய இளமை இத்தனை காலமும் மீ
சைவழித்துக் கொண்ட நான்
உன்னைப்போல் மீசை
வளர்த்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சாவதற்குள்
உன்னோடு விருந்துண்ண
ஆசைப்படுகின்றேன் – ஏனென்றால்
உணவருந்திய பின் நீ கழுவும்
கைநீரைப்
பருக வேண்டும் – அப்போதாவது
உன்முழுக்கவிதைகளின்
சுவையையும் நான் உணரும் பாக்கியம்
பெறுவேனா? என ஏங்குகின்றேன்

உன் கவிதையை
வாசித்த நாள் முதல்
நித்திரையில்லை நிம்மதியில்லை
பகலிற்கும்
இரவிற்கும் வித்தியாசம்
தெரிவதில்லை
ஏன்? ஓய்வு கூட இல்லை
தமிழை வாசித்தறிய வாழ்நாள்
போதாதே என ஏக்கத்துடன்
எழுதுவதை
நிறுத்துகின்றேன் – ஏனென்றால்
உன்
கவிமழையில் நனைவதற்காக!

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருவ வயது

உலைமூடியை
நீராவி தள்ளுவதுபோல்
இரத்தம் கொதிக்கும் வயது
மூடிவைத்த எரிமலையும் கூட
ஊரைப்பற்றிக் கவலையில்லை.....
முட்கள் சூழ்ந்த பதையாயினும் – அது
மெத்தையாகத் தெரியும்
பாம்பு பூச்சி பக்கத்திலிருந்தாலும்
பயம் என்பதே அறியாத வயது
எவர்பேசினாலும் எதிர்த்துக்
கதைப்பதில் ஓர் ஆனந்தம்

எல்லாம் அறிந்தவர்கள் நாம்
எமக்கென்ன இவர்கள் சொல்வது
என ஓங்கி ஒலிக்கும் வயது
மலைநீர் வீழ்ச்சி போல்
அடக்கமுடியாமல்
கட்டறுத்தப்பாயும் காமனின்
ஆட்சிக்காலமும் அதுதான்

புதுமைகாண விழையும்
புரட்சி வயதும் அதுதான்
காலநீரோட்டத்தில்
மூழ்கிச்செல்லும்போதுதான்
ஞானம் பிறக்கும்
விட்டதெல்லாம் தவறுகள் என்று
மனம் நீதி சொல்லும்
பட்டறிவைப் பரம்பரைக்கு உபதேசிப்பவர்
பின்வருபவர் மீண்டும் எதிர்பார்ப்பார் – இதுதான்
பூமியை இயக்க இறைவன்
கையாண்ட தந்திரமோ?

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் வகுப்பு

கைவிரல் சூப்பி
காற்சட்டை இல்லாமல்
சீனி, மா திருடியுண்டு
சுதந்திரமாய் சிறுநீர் கழித்து
தூக்கத்திற்கு எந்த இடம் வசதியோ
அங்கே தூங்கி
இனிமையாய் வாழ்ந்த எம்மை
சிறைக்கு அனுப்பிய முதல் நாள் தான் – அந்த
பாலர் பாடசாலைக்குச் சென்ற முதல் நாள்

முகமறியா முகவரியறியா நண்பர்கள்
எல்லாம் கதறியழ
பெற்றோர்கள் கைவிட்டுச் சென்ற நாள்
இப்போது பல்கலைக்கழகத்தில்
இருக்கும்போதுதான் தெரிகிறது
அது சிறையல்ல
வளம்மிகு விளை நிலம்

அந்த வயதில் எமக்கு எதுவும் தெரியாது
என்பதால் அது சிறையாகத் தெரிந்தது
அங்கே சிறுநீர் கழிக்கும் இடத்தில்
என் நண்பியைப் பார்த்து
உனக்கும் எனக்கும் தண்ணிவரும் இடம்
வித்தியாசமாக இருக்கிறதே என்று வினவியது
இப்போது ஞாபகத்தில் இருக்கிறது

இப்படியே எப்போதும் இருந்திருந்தால்
பாவம் ஏது இந்தப் பூமியில்.............

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவை

தமிழ் உன்னைப் பெற்றாளா அல்லது
தமிழ் அன்னையை நீ பெற்றாயா இது
தீர்வுகாணப்படாது
தொடரும் என் கேள்வி...
நீ என்னைக் கவலைப்படுத்தும் காதலி
பல்லாயிரம் சொற்களை இணைத்து
கவிமழை பொழிந்த உன்னிடம் – ஒரு
காதல் கவிதை வேண்டவேண்டும் என ஒரு
நீண்ட நாள் ஆசை

பருவ வயதில் எனக்கு உன்மீது கோபம்
ஏன் தெரியுமா?
உன் அழகிய ரீனேச் புகைப்படத்தை
எமக்கு இட்டுச் செல்லவில்லை என்பதுதான்
உன்னை ஒரு பாட்டியாக அல்லவா
எமக்குச் சிறுவயதில் எமது பாட்டிமார்
முற்றத்து நிலா நாளில் கதை சொன்னார்கள்

கன்னிப்பருவத்தில் எத்தனை பேர்
உன்னைப் பின் தொடர்ந்தார்கள்
ஆகஸ்த்தியர் வாழ்ந்த காலத்தில் நீ
வாழ்ந்திருந்தாயானால் – அவரின்
துறவம் தொலைந்தே போயிருக்கும்
கோயில் இல்லா ஊரில்
குடியிருக்கவேண்டாம்
என்று ஏன் சொன்னாய்?
திருவிழாக் காலங்களில் சைட்டடிக்க
வசதியாக இருக்கும் என்பதற்காகவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– அல்லது அதிகாலை மணியோசை
கேட்டு – மாணவன்
நித்திரை விட்டெழுந்து கற்க வேண்டும்
என்பதற்காகவா?

உன் திருவாயிற்கு ஓர் மௌத் கிஸ்
அடிக்க வேண்டும் என்பது – எனது
நீண்ட நாள் ஆசை – ஏனென்றால்
அப்போதாவது
உன் கவிதைகளின்
முழுச்சுவையும்
நான் சுவைப்பேனா?

★★★

## பசு

விலை குறைந்த புல்லைத் தின்று
விலைமதிப்பில்லா பாலைத்தந்தை
எம்மை வளர்க்கும் – அந்த
தர்மதேவதையை
கொல்லலாமா?
கொன்று தின்னலாமா?
பசுக்கள் பெற்ற தாய்க்குச் சமன்
பசுவைக் கொல்லுதல் – பெற்ற
தாயைக் கொல்வதற்குச் சமன்

★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழன் சாதிகள்

தமிழா நீ ஏன் இன்னும்
நித்திரை விட்டு எழவில்லை
உன்னைச் சில ஆயிரம்
ஆண்டுகளுக்கு முன்
அந்த ஆசிரியர்கள் தாலாட்டி
உறங்க வைத்தார்கள் – ஏனென்றால்
உன்னை ஆழ்வதற்காக
அவர்கள் வாழ்வதற்காக – நீயோ
தாழ்வதற்காக

எங்களிடம் சாதி என்ற சொல்
இருந்ததேயில்லை
பாகுபாடு என்று பாழடைந்த அந்த
கிணற்றை நாம் என்றும் பயன்படுத்தியதில்லை
நமது மொழி தமிழ்
நமது சமயம் சிவவழிபாடு
யாவரும் ஒற்றுமையின்
சின்னமாய் இருந்தோம்
அக்காலம் மூவேந்தர்கள்
முடி சூடிய காலம் – அப்போது
முடியவில்லை ஆசிரியர்கள்
எம்மை வெற்றி கொள்ள,
அவர்கள் தீட்டிய
சதித்திட்டம் தான் சாதி
நீ பிரிந்து நிற்பதால் யாருக்கு இலாபம்
எவன் எத்தொழில் செய்தாலும்
அவன் நமது மொழி
அவன் நமது ஒரே இரத்தம்
எவனும் எவனுக்கும் அடிமையில்லை
எல்லோரும் சகோதரர்கள் – நமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளையை மிஞ்சுவதற்கு எவருக்கும்
தகுதியில்லை

தமிழ்க் குழந்தைகளே கேளீர்
மதுவை விலக்கி பாலை அருந்தி
நல் ஊட்டச்சத்தை உண்டு
காதுக்கினிய பாடல்களைக் கேட்டு
உடல் உரம் பெறும் வரை ஓடிவிளையாடி
நீ
வீரப்புதல்வனாய் இவ்வுலகில்
வலம் வருவாயானால் – என்
ஆத்மா திருப்தியடையும்
இப்போது உனக்கு புரிந்திருக்கும் – நம்
வீரவரலாறு

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடு

சுதந்திரத்தின் அடையாளம்
அங்குவாழும்
மனிதர்கள் மரங்கள்
அறிவில் முதிர்ந்தவர்கள்
ஆற்றலில் சிறந்தவர்கள் -
யாருக்கும்
இதுவரை பயந்ததில்லை
யாரையும் கேட்டு
வளர்ந்ததில்லை
அவர்களின் விளைநிலத்திற்கு
எல்லைகள் கிடையாது

அவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக
நீண்ட
தியானத்திலிருப்பவர்கள்
அவர்களின் தியானம்
காற்றைச் சுத்தப்படுத்தும்
அசுத்தநீரை நன்னீராக்கும்
வீட்டு வசதியில்லா மிருகங்களிற்கு
வாடையின்றிக் குடியிருப்புக்கள்
வழங்கும்
அவர்களின் தியானத்தைக் கலைக்க
அங்கு இதுவரையாரும்
கூடியது இல்லை

அவர்கள் சுதந்திரச் சிற்பிகள்
அதனால் தானோ?
எங்கள் ஈழத்திருநாட்டில்
சுதந்திரப் போராளிகளுக்கு தஞ்சம்
அளித்தார்கள்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமை

குழந்தைகளின் இனிமை இனிப்பு
காதலர்களின் இனிமை
இரகசியச் சந்திப்பு
பாவலர்களின் இனிமை பாடல்கள்
ஆசிரியர்களின்
இனிமை மாணவருலகம்
விமானியின் இனிமை – இதமான
தரையிறக்கம்
போதகர்களின் இனிமை
பொதுமண்டபங்கள்
கவரிமான்களின் இனிமை
பசுமையான புல்வெளிகள்

சிறு மீன்களின்
இனிமைகண்ட மேடைகள்
சுறாக்களின்
இனிமை சூழ்கடல்கள்
வியாபாரியின் இனிமை விற்பனை வேகம்
ஓவியனின் இனிமை வரையமுடியா
ஓவியம் – ஏனென்றால்
வரைந்த பின் அவன் இரசிப்பதில்லை

பாலைகளின் இனிமை – முதிர்ந்த
இளனிக் குலைகள்
கன்னியர்களின் இனிமை எதிர்காலக்
கணவனின் கற்பனை
ஈழத்தமிழரின் இனிமை........
எதிர்நோக்கி இருக்கும் எங்கள் தேசம்!

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுபாஸ் சந்திரபோஸ்

இந்திய சுதந்திரத்தின் ஆணிவேர்
அதனால் தானோ?
வெளியில் தெரியவில்லை......

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமை

இனிமையை இரசிக்க
இயற்கையின் வளத்தோடு
இறைவன்
எமக்களித்தப்
பரிசு

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியன்

ஏணிபோல் மற்றவரை எல்லாம்
ஏற்றி வைத்துவிட்டு – தான்
மட்டும் அசையாச் சொத்தாய்
அமர்ந்திருப்பான்
அமரம் எய்தும் வரை
அவர்களின்
இனிய நண்பன்
வறுமை.....

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோபம்

உன்னை நீயே
கொழுத்திக் கொள்வதற்காக
மூட்டிய தீ

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பி விளக்கு

மின்சாரத் தடை
பொருளாதாரத் தடை – என
பலதடைகளை இலங்கையில்

சித்தார்த்தரின் பிள்ளைகள் கட்டளை இட்டுச்
சிரித்து மகிழ்ந்தபோது
எங்கள் குலத்தின்
கல்வி அழிந்திடாது காத்த
தூங்காத கண்மணிகள் – இந்தக்
குப்பி விளக்குகளே!

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்சன் மண்டேலா

உங்களை அன்று வசைபாடியவர்கள் எல்லாம்
இன்று தங்கள் நாட்டுத் தலைநகரங்களில்
உங்கள் சிலைகளை நிறுவத்துடிக்கிறார்கள்
உங்கள் நிலையைப் பார்க்கும் போதுதான்
நம்பிக்கை எங்கள் கதவைத் தட்டுகிறது

இன்று எங்களைப் பயங்கரவாதிகள் என்பவர்கள்
நாளை எம்மை தலைவர்கள் என்பார்கள்
நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் கிராமத்து நாய்கள்

எங்கள் காவல் தெய்வங்களைக்
காப்பாற்றிய இறைதூதர்கள்
இரவில் எதிரிகளின் வருகையை
எவர்க்கும் பயமின்றி
உரக்க உரைத்து
போராளிகளை உசார்ப்படுத்தி
படுக்கையை விட்டெழுவித்து
பக்குவமாய்க் காத்த – எங்கள்
கிராமத்து நாய்கள்

அவர்கள் நாய்கள் அல்ல
மகத்தான மகான்கள்
உங்களுக்கு
ஈழம் மலரும் நாளில்
மாபெரும் விழா எடுப்போம்
உங்களுக்கு மாலை அணிவித்து
மனதார நேசித்து – எங்கள்
இதயக்கோயில் நிறுத்தி
நன்றி தெரிவிப்போம்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்னாமியதேசம்

எந்த சக்தி மிக்க
அடக்கு முறைக்கும்
எவனும்
அடங்கத் தேவையில்லை
– என்பதற்கு
மிகச்சிறந்த அடையாளம்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம்

நான் மரணத்தைக் குறித்துப்
பலதடவைகள் பயந்திருக்கின்றேன்
பலமரணங்களைப் பார்த்து பயந்திருக்கின்றேன் - ஏனெனில்
எனது நாடு மரண ஓலத்திற்கென்றேப்
பிறந்த நாடாகிவிட்டது.

எனது நண்பர்கள் உச்சந்தலையிலே
சுட்டுக்கொன்றதைப் பார்த்திருக்கின்றேன்
பலதடவைகள் மரணபயம் என்னை ஒரு
மனநோயாளியாக்கியிருக்கிறது

பல இரவுகளில் உறையும் நடுக்கத்தில்
எழுந்திருக்கின்றேன்
நித்திரை என்னைவிட்டு விலகியிருந்தது
இரவில் என்னோடு வந்து
இணைந்து கொள்ள மறுத்தது

இப்பூவுலகில்
அரியோட்டில்
முதல் ஆபிரகாம் லிங்கன் வரை
ஈசல் முதல் சிங்கம் வரை எல்லாம்
ஒரு நாள் இறப்பைச் சந்தித்தே ஆகவேண்டும்
மாற்ற முடியாத ஒன்றைக்குறித்து
கவலைப்படுவதில் அர்த்தமில்லை

கிருஷ்ணபரமாத்மா கூறிய
அற்புத வார்த்தை என்னைத் தட்டி எழுப்பியது
“எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்"
"எது நடக்குமோ
அதுவும் நன்றாகவே நடக்கும்"

மரணம் கூட ஒரு புண்ணிய தானம்
அதுவும் ஒரு நல்ல நிகழ்ச்சி
ஏனென்றால்
புதிய குழந்தையொன்று
இப் பூவுலகில் வாழ
வழிவிட்டுச் செல்லும் ஓர்
அற்புதத் தியாகம் அதனால்
மரணம் ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகோ

வைகோ ஒரு
வைக்கோல்ப் போர் – அதற்காக
நலிந்தவர் என்று நினைத்து விடாதீர்கள் – அவர்
எரிய ஆரம்பித்தால் – உலகின்
எந்தத் தீயணைப்புப்படையாலும்
அணைத்துவிடமுடியாது
ஈழத்தமிழருக்காய்
மேடையில் திறந்த வாயை
சிறைகளிலே தான்
சாத்தியிருக்கிறார்

மானத்தமிழனின் புகழ் புவியில் வாழும்
காலம் முழுவதும் மறவாது – அவர்
பெயரில் தமிழீழத்தில்
தலைமை விமான நிலையம் அமைத்துக்
காலம் காலமாய் போற்றி மகிழ்வோம்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீமான்

உன்னை கண்ட ஏடுகளைத்
தட்டிப்பார்த்தேன் – நீயே
முற்பிறப்பில் வீரபாண்டியன்
கட்டப்பொம்மன்
என்றல்லவா சொன்னார்கள்
தானாடா விட்டாலும் – தன்
தசையாடும் என்ற – எங்கள்
வீரப்பரம்பரைக்கு
இலக்கணமாக விளங்கும்
உங்கள் பெயர்தான் – எங்கள் ஈழத்திருநாட்டின்
தலைநகரின் பெயராய் சூடுவோம்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயம்

யாரையும் அடிமைக் கொள்வதற்காக
ஆலயங்கள் அமைக்கப்படவில்லை
அடிமைகளின்
சின்னம் ஆலயம் அல்ல
ஆலயத்தில்
மனித இனத்தில்
யார் வேண்டுமானாலும்
வணங்கிச் செல்லலாம்

மனிதன் இறவனைத்தவிர
வேறு எவனுக்கும்
அடிமையில்லை
இறைவனை வழிபட எந்த
மனிதனுக்கும் தரகர் அவசியமில்லை
சமய அனுஷ்டானங்களும்
கிரியைகளும் ஆலயங்களும்
ஆன்மீகத்தின் ஒரு பகுதி - ஆனால்
அவையே ஆன்மீகமல்ல

மனிதநேயமும்
மனித அன்பும்தான்
உண்மையான இறைவன்

நீ இறந்த பின்பு சொர்க்கத்துக்கோ
அல்லது
நரகத்துக்கோ போவாய் என்று
என்னால் கூறமுடியாது ஏனென்றால்
இறந்த பின் எப்படி இருக்கும் என்று
எனக்கு இன்னும் தெரியாது
ஆனால்
சொர்க்கத்தையும் நரகத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு என்னால் காட்ட முடியும்
சுடுவார்த்தைகளை தவிர்த்துக்கொள்
உன்னை எதிர்ப்பவர்களுக்கு
புன்னகை செய்
மற்றவரை நலம் விசாரி
முடிந்தவரை பிறருக்கு உதவி செய்
ஆறுதல் வார்த்தைகளை அள்ளிவழங்கு
நீர் இன்றி அவதியுறும் மரங்களுக்கு
நன்னீர் ஊற்று

பசியோடு வீடுதேடி வருவோர்க்கு
வயிறார உணவளி
உப்பிட்டவரை
உள்ளவரை நினை – இவை
அனைத்தும் சொர்க்கம்
இவற்றைச்செய்யாவிட்டால் – அது
நரகம்
முடிந்தால் முயன்றுபார்

எது வேண்டுமோ
தெரிவு செய்
மகிழ்ச்சியை இவ்வுலகில்
யாரும் தரமுடியாது
நீ தான்
ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்
முயற்சி திருவினையாக்கும்
முடிந்தவரை முயன்று பார் – நீ
சொர்க்கத்தில் இருப்பதை உணர்ந்துகொள்வாய்

மீண்டும் சொல்கிறேன்
இறந்த பின் உன்னால்
சிரிக்க முடியாது – இன்றே
சிரிக்கப் பழகிக்கொள்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலைப் பிரிவு

வானம் தன்
கள்ளப் புருசனை
கவைத்து விட்டு நிஜப் புருசன் சூரியனை
வரவேற்கும் நேரம்
விரும்பியோ விரும்பாமலோ
பலர் பிரிந்து செல்லும் நேரம்
சிலர் நண்பர்களைப் பிரிவர்
சிலர் தம் குடியிருந்த மனையைப் பிரிவர்
முழுப்பேரும் முதல் நாளையே பிரிவர்
பிரிவு என்பது ஓர் உன்னதமான நிகழ்வு

முகில் கூட்டங்கள்
வானத்தை
இட்டுப் பிரியவில்லை என்றால்
பூமி பாலைவனம் ஆகி விடும்!
ஏன்? சிலர் உடலையே
பிரிந்து செல்வர்–அதனால்தான்
புதியவர் உலாவி மகிழப்
போதிய இடம் இருக்கிறது

மரணம் கூட
ஒரு புண்ணியம்
செய்யும் ஒருவகைப் பிரிவு
நாம் சுவாசிக்கும் காற்றை
நாம் அருந்தும் நீரை
நாம் பாவிக்கும் நெருப்பை என
ஐம்பூதங்கள் அனைத்தையும்
நாம் புதிய சந்ததிக்கு
விட்டுச் செல்கிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாம் அனுபவித்த அனைத்தையும்
அவர்களும் அனுபவிக்கட்டும் - ஆனால்
அசுத்தமாக அல்ல
சுத்தமாக - அப்போதுதான்
ஆரோக்கியம் அவர்களைவிட்டுப் பிரியாது இருக்கும்
பூமியின் புனிதம் காக்க - நாம்
நாளொரு மரம் நடுவோம்
குடிநீரை தேவாஅமிர்தம்
எனப் போற்றுவோம்
பிளாஸ்ரிக் பானையை
விட்டொதுக்குவோம்
பூமியை விட்டுப் பிரியும் போது
புனித பூமியை விட்டுச் செல்வோம்...

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆபிரகாம் லிங்கன்

நீதி என்ற சொல்லிற்கு
நானறிந்த ஒத்த சொல்
ஆபிரகாம் லிங்கன்
ஆயிரம் ஆட்சியாளர்களின் பெயர் நான்
அறிந்திருந்தாலும்
என் நினைவில்வாழும்
பசுமரத்தாணி போல்
பதிந்த பெயர் லிங்கன்

நீ இன்று உயிரோடு இல்லையே
என்று ஒரு அமெரிக்கன் ஏங்குவதிலும்
தமிழ் மகன் நான் ஏங்குகின்றேன்
சிறுவயதில் உன் குணாதிசயங்களைக்
கற்றிந்திருக்கின்றேன்
ஏழ்மையிலும் நேர்மை
தோல்விகளிலும்
தளராத் தன்னம்பிக்கை

ஒரு சிறுமி விரும்பியதற்காக
தாடிவளர்த்துக் கொண்டவன் - நான்
சிறுவன் எழுதும் கடிதத்தை
நீ உயிரோடு இருந்திருந்தால்
நிச்சயம் செவி மடுப்பாய்

நீஅறிந்த நீதியின் படி - எம்மை
ஒருபோதும் பயங்கரவாதிகள் என்று
கூறியிருக்கமாட்டாய்
சுதந்திரப்போராட்டத்திற்கும்
பயங்கரவாதத்திற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசம் தெரியாமல்
தடுமாறுகிறார்கள் – உன்
வழிவந்த ஆட்சியாளர்கள்

நிச்சயம் நீ பூமிக்குத் திரும்பி வரவேண்டும்
இதுவே எனது இன்றைய பிரார்த்தனை
யேசு மீண்டும் வருகிறாரோ இல்லையோ
ஆனால் எமது இனம் அழிந்து கொள்ளாது தடுக்க
நிச்சயம் நீ வரவேண்டும்

அது சிலவேளை "ஒபாமாவின்" வடிவிலும்
நீ வருவாய் என்று எதிர்பார்க்கிறேன்
நான் பதினொரு
வயதிலிருந்து பதினேழு ஆண்டுகளாக
வேண்டிக்கொண்ட வேண்டுதல் இது
சிங்கள இராணுவம்
எம் கிராமத்தில்
புகுந்து எம்மைச் சிறுமைப்படுத்தும் போதெல்லாம்
நான் உனக்குக் கடிதம் எழுதுவேன் – ஆனால்
அமெரிக்காவிற்கு
அனுப்பிவைக்க என்னிடம் காசுமில்லை–உன்
முகவரியும் எனக்குத் தெரியாது
முகாரிராகமே ஒலித்து ஒலித்து – என்
கிராமம் அழவுறும்போது கண்களில் கண்ணீர்
இல்லாமல் இருக்கிறது

காற்றாக நீ இருந்தால்
கட்டாயம் நீ சென்று
அவர்களின் காதுகளில் ஆறுதல் கூறு

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்களே!

யேசு நபி போன்ற
புனிதர்கள் மீண்டும் வருவார்களென்றாள்
இன்னமும் விரிகின்றீர்கள்
புனிதர்களைப் பூக்களும்
பூக்களைப் புனிதர்களும்
நேசித்தார்கள் - ஆனால்
பூமி மட்டும் இன்னமும்
புனிதமடையவில்லை
ஏழை இன்னும் ஏழையாகவே
இருக்கின்றான்

இரக்கம் என்பது எங்கோ ஒரு மலைச்சாரலில்
தொலைந்து குண்டுமணியாகிவிட்டது
தேடுங்கள் கிடைக்கும் என்று
சொல்லிவிட்டு பரமண்டலத்திற்கு
ஏகிவிட்டார் ஏசு - ஆனால்
இன்னும் அந்தக் குண்டுமணி
கையில் சிக்கவில்லை

பிஞ்சுகளையும் குஞ்சுகளையும்
கொல்வதுதான் தர்மம் என்கிறது உலகம் - அதை
தடுத்து நிறுத்தப் போராடுபவனை
பயங்கரவாதம் என்கிறது!
மனுதர்மம் போதித்த இனத்தை
மாடுபோல் நடத்துவதுதான் சரிஎன்கிறது

உலகிற்கு இருவரிகளில் உயர்
பொருள் கொண்ட வாழ்க்கை நெறியை
போதித் திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மொழியின் செழுமைக்கும்
முதுமைக்கும் ஓர் உயரிய சான்று
உயர் செழுமைமிகு இனம் ஒன்று
அழிவதை உலகம் தடுக்க முன்வரவில்லை
தம்மை அழிவில் இருந்து தடுக்க
ஆயிரம் ஆயிரம்
யேசுநாதராய் ஆயிரம் ஆயிரம்
காந்தியடிகளாய்
தம் உயிர்தந்து காத்த இலட்சியப்புருஷர்களின்
உன்னத நாள் இன்று

பூக்கும் பூக்களெல்லாம் இன்று
புனிதமடைகின்றன
இன்று வண்டுகள் தேன் எடுப்பதை
நிறுத்திக் கொண்டன
இன்று பூமியில் விழும் மழைத்துளிகள்
பெருமைப்பட்டுக் கொள்கின்றன
தென்றல் காற்று இன்று
அவர்பெயரை சொல்லி அழைக்கிறது
இயற்கையே எம் பக்கம் நிற்கிறது
தர்மம் வெல்லும் என்பதை
இயற்கையே நிறுவுகின்ற நாள்
தொலைவிலில்லை

பரமண்டலத்தில் இன்று புத்தபெருமான்
அவர் கதிரையில் இல்லை
அக்கதிரையில் கரும்புலி மில்லரை இருத்தி
பூஜிப்பதாகவே சித்தர்கள் அறிவிக்கிறார்கள்
அங்கோ காந்தி அடிகள் திலீபனை
ஆரத்தழுவி என்னையே விஞ்சிய வீரப்புதல்வா
என்று வாழ்த்துத் தெரிவிப்பதாகவே சொல்கிறார்கள்
மரங்களைத் தறியாதீர் என்பார்களே
மிருகங்களை வதையாதீர் என்போர்களே
எங்கள் அவலக்குரல் இன்னுமா
உங்களுக்குக் கேட்கவில்லை
அப்படிக் கேட்கவில்லை என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றே கலைத்துவிடுங்கள்
உங்கள் ஐநா சபையை
இன்றே கிழித்து விடுங்கள்
உங்கள் ஒப்பந்தங்களை

பல்லாயிரம் யுத்தங்களைத் தாண்டி
விருட்சமாய் வளர்ந்து நிற்பவள்
தான் எம் தமிழ்த்தாய்
அவளிற்கு யுத்தம் புதியதுமல்ல
பழையதுமல்ல காலம் பதில் சொல்லும்

உலக வரைபடத்தில் மாற்றம் வரும்
இந்தியாவின் கடைசிமகள்
இவள் தான் என இந்தியர்கள்
பெருமைப்படும் காலம் விரைவில் வரும்

இந்தியா வல்லரசாவதற்கும் நாம்
வலக்கையாய் இருப்போம்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களத்தின் நாயகனே!

இன்று நீ மாணவன்
நாளை நீ மகாகெட்டிகாரன்
மனதைத் திடப்படுத்திக் கொள்
மலைகள் வந்தாலும் – என்
தலைகள் சுமக்கு மென்று

நீ சாதிக்கப் பிறந்தவன் – அன்றிச்
சளைப்பதற்கல்ல
விதி தலையில் என்பார்கள் – இல்லை
உன் நுனி விரலில் உண்டு
ஊன்றி எழுதிப்படி உனதாகும் நாளை!

பாதி பயில்கையில் சலிக்காதே
மோதி எழும் அலைகளின் பலம் – நீ
சுனாமியில் கண்டிருப்பாய் – அது போல்
சாதிக்கப் பிறந்தவன் நீ என்பதால்
பரீட்சையில்
ஒரு முறை சுனாமியாய் சுழன்றிடு

பேப்பர் திருத்துபவன்
பெருமிதம் கொள்வான்
யார் இந்தத் தமிழன் என்று
நாளை நாடே கதைக்கும்.
காலையில் உன்னொடு எழுந்த பறவைகள்
பண்ணிசைத்துப் பரவசப்படும் – அப்போது
உலகறியும் நீ சாதிக்கப் பிறந்தவன் என்று

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான சகோதரனே !

அருவருப்பான குரலில் – அந்த
முதியவரைப் பார்த்து நீ
கஞ்சன் என்கிறாய்
உண்மை அதுவல்ல
நீ தான் செலவாளி
சில்லறை விலையில் – நீ
வாங்குவதெல்லாம்
சிகரெட் அல்ல
சின்னச் சின்ன சவப்பெட்டிகள்!
சீக்கிரம் தீர்ந்து விடும் உன்
கையிருப்புகள்
காலமெல்லாம் தனவந்தராய்
முதிர்ந்தாலும் இளையவராய் – அவர்
இருப்பார்
கைநீட்டி நீ கேட்டால்
கலங்காமல் கடன் தருவார்
அவர் பெயரோ இப்பொழுது முதலாளி
உன் பெயரோ கடனாளி
தொடராதே உன் விளையாட்டை
ஏனெனில்
கடனாளிகள் கழுத்தில் சுருக்கிட்ட
வரலாறுகள் தான் அதிகம்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈன்றெடுக்கும் காலம்

பெட்டகங்களில் பூட்டிய
சட்டங்களால்
பட்டது போதும்
விட்ட தவறுகள் – இனியும்
விடமாட்டோம்

இதயம் திறந்து பேசினோம்
இரக்கம் வரவில்லை – அவர்களுக்கு
ஈழம் தான் முடிவென்றான் – எம்
இனத்தின் தலைவன்
ஈன்றெடுக்கும் காலம் – மிக
விரைவில் வரும்

மலைகள் அல்ல தமிழன் – அவன்
மௌனமாய் இருப்பதற்கு
உற்றுப்பார் தெரியும் – உறுமும்
எரிமலைகள் என்று
திருமலையில் தீராப்பகைக்
காட்டினாய் – நாம்
தீர்த்தமாடும் காலம் விரைவில் வரும்
வீட்டிற்கு போக விடமாட்டேன் என்றாய்
பொறுத்திருந்துபார் காலம் பதில் சொல்லும்
வீரர்களுக்கு
ஓர் வேட்டைத் திருவிழா வரும்
விரல்கள் வில்லின்மேல் விளையாடும் – என்
வீட்டு வாசல் வீரனை
வரவேற்க காத்திருக்கும்
வீடு செல்வேன் நான் – அப்போது
விறைத்திருப்பாய் நீ!

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஜினிகாந்த் ஐயா அவர்களுக்கு

வந்தோரை வாழவைப்பதில்
பெருமை அடைவது தான்
தமிழகம் என்று முத்துகுமார் கூட
மிகத் தெளிவாக எழுதிச் சென்றுள்ளான் – அது
மறுக்கமுடியாத உண்மையும்கூட – என்
தாய்த் தமிழகம் தன் மடியில்
பசியோடு உறங்கும் எத்தனையோ
சிறுவர்களைச் சுமந்தாலும்
வந்தோரை வாழவைப்பதில் அது
என்றும் பின்நின்றதில்லை – ஆனால்
வந்தவரெல்லாம் அவள்
முதுகில் ஈட்டி அல்லவா
ஏற்றினார்கள் – ஏன்
அவளுக்கு மட்டும் இப்படி ஒரு
கொடுமை!
நீங்கள் கூட காவிரிநீர்
பிரச்சனையில் இன்னும் ஏன்
தெளிவாகப் பேசவில்லை

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவன்!

எனக்கு ஒரு நீண்டநாள் ஆதங்கம்
என்னவென்றால்?
வேண்டும் போது மட்டும் வடஇந்தியர்கள்
தமிழகத் தமிழனை!
இந்தியன் என்கிறார்கள்.

வேண்டாத போதெல்லாம்
தமிழன் என்கிறார்கள் - இது
நீண்டநாளாகவே
விடுவிக்கப்பட முடியாத
விடுகதையாகவே எனக்கிருந்து வருகிறது.

வேட்ககளைத் தீர்த்துதான் விடுதலை
அடைய வேண்டுமென்றில்லை - ஆனால்
எங்களைப் பொறுத்தவரை - வேட்டுக்கள்
தீர்த்தால்தான் விடுதலை கிடைக்கும்
என்ற வரலாற்றை - இந்திய
வரலாற்றின் சிற்பி
சுபாஸ் சந்திரபோஸ் விட்டுச் சென்றுள்ளார்.

அவரைத்தேடுவதாக செய்திகள் வருகின்றன
ஆனால்
அவரை தேடுவது சரி - எங்கள்
தலைவரே தேடுவதும் சரி
என்னைப் பொறுத்தவரை
எந்த வித்தியாசமும் இல்லாத
சம நிகழ்வாகவே இருக்கிறது - எதற்கும்
காத்திருப்போம் - காலம்தான்
அந்தத் தேடலுக்கான சரியான
விடையை நல்கும் - காத்திருப்பதும்
ஒருவிதமான ஞானிலைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தைத் தேடி காத்திருப்பதில்
தவறொன்றும் இல்லை.
வாழ்க்கையை விழக்குவதற்காக
வாழ்வைத் துறந்து வனம் போனவனல்ல
எங்கள் தலைவன் – வாழுந்து கொண்டே
வாழக்கற்று தந்த
ஆயிரம் ஆயிரம் அகஸ்தியருக்குச் சமம்
எங்கள் தானைத்தலைவன் – இன்று
தலைவன் நாளை கடவுள்

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் வழிகாட்டி

புதிய நூற்றாண்டை
தொடங்கிவைத்த
எங்கள் இதயம் நிறைந்த
இனிய நண்பனே!
நீதான் இந்த நூற்றாண்டில்
அடிமைகளின் வழிகாட்டி
அடக்கமுறை கொம்படு – எங்களை
அடக்க நினைக்கும்
சிங்கள இனவாதக் கும்பலில் இருந்து
எங்கள் சின்னஞ்சிறு பிள்ளைகளை
காக்கவந்த
யேசுநாதர் நீதானய்யா
உன் பதவி ஏற்பு வைபவத்தை பார்த்து
புழுதி வீதியில் துப்பாக்கி
முனைகளிற்கு நடுவில் தவழும்
எங்கள் குழந்தைகள்தான்
அதிகத்தடவை கைதட்டினார்கள்
என்பது உனக்கு சிலவேளை
தெரியாமல் போகலாம் – ஆனால்
உன் உடலாரோக்கியத்திற்காக
அதிகம் இறைவனை வேண்டுபவர்கள்
எங்கள் ஊரில் உள்ள எல்லாப்
பூக்களையும் பிடுங்கி உனக்கு
மாலை சூட எங்களுக்கு அதிக விருப்பம்
ஆனால் என்ன செய்வது?
பூக்களை பிடுங்கச் செல்வதற்கிடையில்
பத்துத் தடவைக்கு மேல் கிளஸ்டர்
குண்டுகளை வானத்தில் பொழியும்
வல்லூறுகள் பேரிரைச்சலுடன்
வந்து குண்டுகளை பொழிகிறது
எங்களை நாங்கள் புதிய ஆபிரகாம்
லிங்கனாகவே பார்க்கிறோம்
எங்களிற்கு நிம்மதியை ஏற்படுத்தி தாருங்கள்
நாங்கள் உங்களோடு சேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடின உழைப்புச் செய்து
உங்கள் விழுந்துபோன பொருளாதாரத்தை
கட்டி வளர்ப்போம்
அதிகம் எழுத விரும்பவில்லை ஏனென்றால்
இதை நீங்கள்
வாசிப்பதால் உங்கள் அதிக நேரத்தை
வீணடிக்க நான் விரும்பவில்லை – ஏனெனில்
உலகில் மாற்றத்தை ஏற்படுத்த
அதிக நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்
எங்களிலும்
பார்க்க பாலஸ்தீன சிறுவர்கள்
இன்னும் சிரமப்படுவதாக அறிகிறோம்
ஆகவே முதலில் அந்தச் சிறுவர்களை
காப்பாற்றுங்கள்.
பின்னர்
எங்களை காப்பாற்றுங்கள்
நீங்கள் பைபிள் மீது
சத்தியம் செய்து கொண்டீர்கள்
எங்கள் தேசியத்
தலைவரும் பைபிளின் யுத்தத் தந்திரங்களை
கையாளுகிறார்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலக்கும் எம் உறவுத் தமிழகமே

நீங்கள் விடுகின்ற பெருமூச்சு
எங்கள் கன்னத்தில் வடியும் கண்ணீரை
உலர்த்துகிறது.
இன்று நீங்கள் பாடும் சங்கீதம்
எங்கள் இதயத்தை
சந்த ஒழுக்கின்படி இயங்க வைக்கிறது.
நீங்கள் பேசும் பேச்சுக்கள்
ஆயிரம் ஆண்டுகள் தவமிருந்த
முனிவர்கள் தரும் ஆசீர்வாதம் போலிருக்கிறது.
வயிறு பசிக்கின்ற போதும்
மாரி வெள்ளம் எம்மை மறைத்த போதும்
மாசிப்பனி எம்மை நனைத்த போதும்
உங்கள் வார்த்தைகள் – இன்று
கூனி இருந்த முதுகினை நிமிர்த்தியுள்ளது.
நாங்கள் உடலற்ற பிண்டமாய்
நிலத்தில் வீழ்ந்த போதும் – உங்கள்
வார்த்தைகள் எங்கள் காதுகளில்
ஆழ ஊடுருவச் செல்கின்றது.
நாங்கள் சுதந்தரித்திற்காய்
போராடுகின்றோமே தவிர
சோற்றிற்கு உப்பிடுவதற்கு கெஞ்சவில்லை
எங்கள் நிலங்களில் விவசாயம் செய்து
எங்கள் கடல்களில் மீன் பிடித்து
எங்கள் கல்லூரிகளில் கல்விப் பயின்று
எங்கள் முற்றத்து மணலில் கோயில்கட்டி
எங்கள் வீதிகளில் தடக்கி விழுந்து
எங்கள் கோயில்களிற்கு விழா எடுத்து
நிம்மதியாய் தமிழ் வளர்த்தி நித்திரை செய்த எம்மை
படுக்கையில் வைத்து சிரசு கொய்தது – அந்த சிங்களம்.

அன்று அந்தக் கிழவனை எல்லாலனை
நேருக்கு நேர் மோதிக் கொல்லவில்லை – அந்தப்
படுபாதகன் துட்டகைமுனு பிக்குபோல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுவேடம் பூண்டு போர்க்களத்தில் சென்றபோது
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி பாதங்களில் பணிந்தபோது
முதுகிலே குத்தி மகிழ்ந்தான் அந்தச் சண்டாளன்
முயலினை சிங்கங்கள் கூட்டமாய் கனக்கும்போது
புதரினை நாடி ஓடுவது போல
சிதறி ஓடுகிறோம்.
நாங்கள் இன்று நாளை
புயலென எழுந்து அலையலையாய்
புலிகள் சேனை நுழைந்து கொழும்பு நகரில் என்று
செய்தி வரும்போது – தயாராகுங்கள்
தாளம் போட்டு கும்மியடிப்பதற்கு – அப்போது
கொழுத்துங்கள் பட்டாசு தமிழகம் எங்கும்
அடியுங்கள் தேங்காயை ஆலயம் தோறும்
மலர்ந்ததும் தமிழீழம் – இணையுங்கள்
பாலம் போட்டு உங்களையும் எங்களையும்
ஏனென்றால்?
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை – எதிர்காலத்தில்
எச்சில் இலைக்கு எந்தத் தமிழ்ச்சிறுவனும்
ஏங்கக் கூடாது!
அதைத் தடுப்பதற்கு இன்றே
உலகத்தமிழன்
தயாராகத் தொடங்கிவிட்டான்
வாழ்கத் தமிழகம்
இந்த வையகம் வாழும் காலம் முழுவதும்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்த விக்ரம சிங்கிற்கு

உண்மை தெரிந்துரைத்த
உத்தமனே! – நீ
பூட்டி எடுத்துக்கொண்ட
பத்திரிக்கைத் துறை அலுவலகத்தின்
சாவி
எங்கோ தொலைந்துவிட்டது
இலங்கையைப் பொறுத்தவரை
உன்னை அழித்தவர்களால் கூட – உன்
வாசகங்கள் நிறைந்த கடிதத்தை
எரிக்க முடியவில்லை
இலங்கை என்பது
மனிதர்கள் வாழும் தீவு அல்ல – அது
பேய்கள் வாழும் தீவு.
உன் கடிதத்தை பி.பி.சி. இல்
வாசித்தார்கள். ஆர்.பி.சி.யினர்
நேசித்தார்கள் – ஆனால்
அந்த குரோத குணம் கொண்ட
குடும்ப ஆட்சிக்காரர் மட்டும்
ஏனோ? மனத் திறந்து
இரங்கல்பா படிக்க மறுக்கின்றனர்.
ஈழ விடுதலைப் போர் – வெறுமனே
தமிழர் விடுதலைக்கானது மட்டுமல்ல
– ஏழைச்
சிங்களவர்களுக்குமானது என்பதை
காலம் கற்பிக்கும் – நீ
வரைந்த பத்திரிகைத் துறைக்
கோலங்கள் இன்னும் குலையாமல்
கட்டழகோடு தான் இருக்கிறது.
ஈழம் பிறந்ததும் எம் தேசத்தில்
மீண்டும் வந்து எங்கள் மாவீரர்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து பிறந்து விடு – அப்போது
அங்கே எந்தத் தடையுமின்றி
உன் பத்திரிகைச் சுதந்திரம்
பறிபோகாமல் எழுதுவதற்கு
வாய்ப்புக் கிடைக்கும் அப்போதுதான்
உன் ஆன்மா முழு மனதோடு திருப்தியடையும்
உன் கனவுகள் வெல்லும் – காலம்
பதில் சொல்லும்
அதுவரை உன்னோட நாங்களும்
காத்திருப்போம்.

★★★

●

தங்கம் கரைந்த ஓடைகளெல்லாம்
தமிழ் தமிழ் என்றே பாயும்
சங்கம் வளர்த்த வீதிகளெல்லாம்
தமிழ் தமிழ் என்றே பாடும்
சங்கம், ஜவனி வென்ற
வீரர் திருக்குலமாகும்.
இமயமலைக்கும் ஆசைவந்தால் எங்கள் புவி
பொடிகள் சூழும் – எங்கள்
நாட்டில் ஈன்று
முடித்தால் முயலின் குட்டி
புலியாகும்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கே முழங்கு

செங்கதிர் வானிற் சிரித்தெழும் காலம்
வந்தது என்று சங்கே முழங்கு!
செந்தழல் பட்டுச் சிவந்த நம் தேசம்
வெல்லும் என்று சங்கே முழங்கு!
இங்கினித் துன்பம் எமக்கில்லை என்று
எண்திசை கேட்கச் சங்கே முழங்கு!
பொங்குநற் தமிழும் போற்றிடு கலையும்
அன்பொடு பொலியும் என்று சங்கே முழங்கு!
திங்களும் கதிரும் குன்றோடு கடலும்
இங்குள்ள வரையும் யாமும் உள்ளேமே
என்று சங்கே முழங்கு!

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●

தறிக்கத் தறிக்கத்
துளிர்த்தெழுவோம் நாங்கள்
எரிக்க எரிக்க
உயிர் பெறுவோம் நாங்கள்
அழுத்த அழுத்த
அகன்றெழுவோம் நாங்கள்
மறுக்க மறுக்க
மடையுடைக்கும் ஆறாவோம்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●

வன்னிமண் சுனைகள் அற்ற சுடுமணலும் அல்ல
மரங்கள் அற்ற பாலைவனமும் அல்ல
அமுதம் சுரக்கும் அன்னை முலை - இதை
கையிடம் சிக்கவைத்து விட்டு எப்படிச்
சமரசரப்பட முடியும் - இங்கு
வளரும் மரங்களை வெட்டிப்பார் - அங்கு
வடிவது பால் அல்ல பத்துத்தலைமுறைக்கு
முந்திய உன் பாட்டியின் இரத்தம்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●

பாறை பிளந்து ஊற்றுக்கள் தேடி
தூரத்து துலாவில் இருந்து பாட்டிசைத்து
ஆழக்கிணற்றில் நீரள்ளிப் பயிர் வளர்த்து
ஆழக் கடலேறி மீன் பிடித்து
ஏர்க்கலப்பை தோலில் ஏற்றி
தேனிகள் போல் கூடி வாழ்ந்த
எம் கூட்டை – கல்
எறிந்து கலைத்தார்கள் – அந்த
கயவர்கள் – காலம் பதில் சொல்லும்,
நாளை கட்டுவோம் பாடை எல்லாச்
சிப்பாய்களுக்கும் அப்போது
பிறக்கும் தமிழீழம் – அன்று
செருக்கழுத்து வீரர்களுக்குச் சன்னப்பூ
சாத்தும் தமிழீழம் – அந்நேரம்
பறக்கும் எங்கள் புலிக்கொடி
ஐநாவில் – அப்போது
உலகம் புருவம் நெரித்து உற்று நோக்கும்
யார் இவர்களென்று?
நாங்கள் சொல்வோம் தமிழரென்று!

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●

உலகெங்கும் எங்கள் ராணுவ வரலாற்றை
பல்கலை கழகப் பாடமாக்குவார்கள்.
உலகெங்கும் வாழும் அடிமையர்களெல்லாம்
தமிழீழம் வழி காட்டும் – ஆகவே
மாற்றத்தை ஏற்படுத்த பிறந்தவன் எங்கள்
தலைவனே அன்றி வேறொருவனும் அல்ல.
உலகத்து அடிமையரெல்லாம் போற்றி
வணங்கப்போவது எங்கள் தலைவனேயே அன்றி
வேறொருவனையும் அல்ல.
தென்னாப்பிரிக்கா முழுவதற்கும்
உணவு வழங்கும்
நாடு தமிழீழம் தான்
இக்கிரகத்தில் மக்கள் பசியோடு இருக்க
வேற்றுகிரகத்தில் ஆளைத்தேடி ஆராய்ச்சி செய்யும்
மடமை ஆராய்ச்சி தமிழீழத்தில் இருக்காது.
அணு ஆயுதங்கள் செய்யமாட்டோம் – ஆனால்
செய்யத் தெரியாது என்று மட்டும் உலகம்
தப்புக் கணக்குப் போடக் கூடாது.
பணிவோடு வருபவரை
கனிவோடு வரவேற்போம்.
குத்த நினைத்து வருபவரை
குதறியே எறிந்திடுவோம்.
இதுதான் எங்கள் வெளிநாட்டுக் கொள்கை.
அங்கே எந்த நரித்தனமும் இருக்காது.
நல்ல எண்ணம் மட்டுமே இருக்கும்.
2012ல் ஒலிம்பிக்கில் அரைவாசி
வெற்றிக் கோப்பைகள் தமிழீழத்திற்குதான்
முடிந்தால் எந்த நாடாவது தடுத்துப்
பார்க்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீச்சல் முதல் பாய்ச்சல் வரை எல்லாப்
பதக்கமும் எங்கள் பிள்ளைகளின்
கழுத்தில் தொங்குவதை யாராவது
முடிந்தால் தடுத்துப் பார்க்கட்டும்.
இன்னும் ஐந்து வருடங்களில் ஆயிரம்
ஆயிரம் பில்கேட்ஸ் தமிழீழத்தில் தான்
இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன் – மீண்டும்
உலகம் புருவம் நெரிக்கும் –
அப்போதும்
நாங்கள் சொல்வோம் தமிழரென்று – இப்போது
உனக்குப் புரியும்
நிமிர்ந்த தலையரே விடுதலைச் சூரியரென்று.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யசிர் அராபத்!

உலக விடுதலை இயங்களின்
வழிகாட்டியாய் திகழ்ந்தீர்கள்
நீங்கள் இல்லாதாதல் – இன்று
பாலஸ்தீனக் குழந்தைகள்
பால் குடிக்க மறுக்கின்றன
ஏனென்றால்?
உயிர் பிழைத்து
அடிமையாய் வாழ்வதைவிட
சிசுவாக மடிவதே
மேலென எண்ணுகின்றார்கள்.
உங்கள் சமாதியின் மேல்
முளைத்த புற்களை ஆடுகள் மேய்ந்த போதும்
மீண்டும் முளைப்பது போல்
கமாஸ் இயக்கம்
புதிய புதிய போராளிகளால்
பூத்தக் குலுங்ககின்றது.
வாழ இடமற்ற யூதர்களிற்கு
தஞ்சமளித்தீர்கள் ஆனால் அவர்களோ
உங்கள் அடிவயிற்றில் கைவைக்கின்றனர்.
எமை அழுதக்
கண்ணீர் கூரிய வாளைவைக்கும்
என்பது எங்கள்
பாட்டன் சொல்லிய
பழமொழி – பலமில்லாதவன்
பிணமாய் இருப்பான் என்பது
இந்த நூற்றாண்டின் புதுமொழி.
காலமிட்டக் கட்டளையில்
கடுகளவும் கலங்காதீர்கள் – ஏனென்றால்
பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்த
நீலவானம் – இன்றும்
நீலமாகத்தான் இருக்கிறது.
அந்த நாட்களில்
பஞ்சபாண்டவர்கள் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றார்கள் என்று சரித்திரம் கூறுகிறது
ஆகவே
கடமையை செய்யுங்கள்
பலன் தானாக கிடைக்கும் – உலகின்
எந்தப் பகைச் சக்தி
அடக்கினாலும்
அடங்கி விடாதீர்கள் –
நீதி தேவதை
கோமாவில் இருப்பது எங்களிற்கும்
நன்கு தெரியும் –
ஏனென்றால்
உங்களைப் போலவே ஈழத்தமிழரும்
அடக்கு முறையின் சிலுவைகளை
சில நூற்றாண்டுகளாக
அனுபவித்து வருகின்றனர்.
ஆழக்கடலேறி மீன் பிடித்து
ஏர்க்கலப்பை தோளில் ஏற்றி
பாறை பிளந்து ஊற்றுக் கண் தேடி
கடின உழைப்பே உயர்வு தரும்
என்று வாழ்ந்த எம்மினத்தை
துப்பாக்கிச் சன்னங்கள் கொண்ட
சாப்பிடத் தொடங்கியது – அந்த சிங்களம்
சீறி எழுந்தது தமிழினம்
உற்று நோக்கிய உலகனிங்கள்
சமாதானம் பேசியே
சாகடித்து விடலாம் என்று
களத்தில் இறங்கியது நோர்வே
வீடுதேடி வந்து
நக்கித்திண்ட எரிச்சொல் கேட்டு
உங்கள் உணவுகள் மிக்க சுவையெனச் சொல்லி
பத்திரிகைகளை பட்டிண்றத்தால்
அலங்கரித்தனர் – ஆனால்
பாலாடுகளை ஓனாய் மேய்வது போல்
கொத்தனிக் குண்டுகளை (Clusten bomp) சிங்கம்
கொட்டி மகிழ்ந்தபோது
எங்கள் குழந்தைகள் கதறியழுதபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூன், குருடு, செவிடாய் இருப்பதன்
மர்மம்தான் என்ன?
உன்னைச் சொல்லி குற்றமில்லை தம்பி
ஏனென்றால்?
உன் பிறப்பைப் பற்றி உன்னைப் படைத்த
இறைவனுக்குத் தான் தெரியும்.
எங்களுக்கு ஏற்பட்டது போல் உங்களிடமும்
சமாதானம் பேசுவார்கள் - ஆனால்
மயங்கிவிடாதீர்கள்.

★★★

## வின்ஸ்ரன் சர்ச்சில்

வாழத்துடிக்கும் ஈழத்தமிழனத்திற்கு
இந்த நேரத்தில் - ஒரு
வின்ஸ்ரன் சேச்சில்
வரமாட்டாரா?

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நூலில் உலவும் தம்பியின் கவிதைகள் ஒவ்வொன்றும் தாய்நாட்டின் ஏக்க பெருமூச்சாய் சுடுகிறது. உள்மனதில் வடியும் இரத்தமும் எதிர்கால தேசத்தின் கனவும் கானக்கிடைக்கின்றது கவிதையில்,

“தறிக்கத் தறிக்கத்
துளிர்த் தெழுவோம் நாங்கள்
எரிக்க எரிக்க
உயிர் பெறுவோம் நாங்கள்
அழுத்த அழுத்த அகன் றோழுவோம்
மறுக்க மறுக்க
மடையுடைக்கும் ஆறாவோம்”

“வளரும் மரங்களை
வெட்டிப் பார் – அங்கு வடிவது
பால் அல்ல!
பத்து தலைமுறைக்கு முற்திய
உன் பாட்டியின் இரத்தம்” –என

பீறிட்டு எழும் போது நமக்கு இதயம் விம்மி எழும். வாழ்வதற்கு தேடும் தேடல் ஒவ்வொறு கவிதைகளிலும் கூடுகட்டியிருக்கிறது.

அருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org